Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 30, 2023

வெள்ளிக்கிழமை ஜூன் 30, 2023 | ஒளி: 09 கதிர்: 030 | பக்கம்: 06 | வடக்கு,கிழக்கு | FREE



## அதிர்ஷ்டம் பார்க்கவும் அதிக பணம் வேண்டும்

ஜூலை 6ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில் அதிர்ஷ்ட இலாப சீட்டுகளின் விலையை 40 ரூபாயாக அதிகரிப்பதற்கு தேசிய மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபைகள் தீர்மானித்துள்ளன.

20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் விலை இரட்டிப்பாகும் என்பதுடன், விலை அதிகரிப்புக்கு நிதி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக தெரியவருகிறது.

தொடர்ச்சி P2

புதிய கடன் மறுசீரமைப்பு திட்டத்தினூடாக

# EPF, ETF நிதியங்களுக்கு எந்த சிக்கலும் ஏற்படாது



புதிய கடன் மறுசீரமைப்பு திட்டத்தினூடாக ஊழியர் சேமலாப (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை (ETF) நிதியங்களின் அங்கத்தவர்கள் தமது பணத்தை பெற்றுக்கொள்வதில் எவ்வித சிக்கல்களும் ஏற்படாது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பின் போது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பில் தெளிவூட்டுவதற்காக ஜனாதிபதி ஊடகப் பிரிவால் வியாழக்கிழமை (29) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடக சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வங்கி கட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டம் திட்டமிடப்பட்டு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## இலங்கைக்கு 700 மில். டொலர் வழங்க உலக வங்கி தீர்மானம்




பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலைபேறுதன்மையை கட்டியெழுப்புவதற்காக 700 மில்லியன் டொலர் நிதியை இலங்கைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு உலக வங்கி தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

தேர்தல் மற்றும் மனித உரிமைகள்

## ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்

தேசிய தேர்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் ஜனாதிபதியால் பெயரிடப்பட்டுள்ளனர்.

துறைசார் நிபுணத்தும் கொண்டவர்களுக்கு மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## வரி அறவீட்டு பிரச்சினைகளை நிவர்த்திக்க விசேட நீதிமன்றம்

அன்றாடம் வரி அறவீட்டின் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கான விசேட நீதிமன்றம் ஒன்றை நிறுவுதல் உள்ளிட்ட பரிந்துரைகளை ஜனாதிபதியின் அனுமதிக்காக விரைவில் கையளிக்க எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்லாபிட்டிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## விபத்தில் சிக்குண்டு விஜயகலா படுகாயம்

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் மங்களவெளி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட நால்வர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வியாழக்கிழமை (29) அதிகாலை 5.40 மணியளவில் இடம்பெற்றதாகவும் அவர்கள் பயணித்த வான், வேகக் கட்டுப்பாட்டை இழந்து, மரமொன்றுடன் மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

விபத்தில் படுகாயமடைந்த விஜயகலா மகேஸ்வரன், புத்தளம் தள வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிலாபம் பொது வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிகிச்சை பெற்று வருவதுடன், படுகாயமடைந்த சாரதி உட்பட ஏனைய மூவரும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தொடர்ச்சி P2

## விமானப் படைக்கு புதிய தளபதி நியமனம்

விமானப் படையின் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள எயார் வைஸ் மார்சல் உதேனி ராஜபக்ஷவுக்கான நியமனக் கடிதம், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கைளிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## குரங்குகள் தொல்லை கொடுத்தால் கேட்காதீர்கள்

வன விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதங்களை தடுப்பது பற்றி இனி எங்களிடம் கேட்க வேண்டாம் என கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். வன விலங்குகள் ஏற்படுத்தும் இடையூறுகளால் நாட்டின் விவசாயிகள் எதிர்நோக்கும் அல்லல்கள், கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளில் டொலரை நம்பி வாழும் விலங்கு நல சங்க அம்மணிகள் மற்றும் ஐயாக்களுக்கு புரியவில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



நிர்வாணப் பட விவகாரம்:

## வீட்டை முற்றுகையிட்ட 500 பேரால் பரபரப்பு

### ஆகாயம் நோக்கி சுட்டு கட்டுப்படுத்தினர் பொலிஸார்

யுவதியின் நிர்வாணப் புகைப்படங்களை சமூக ஊடகங்களில் வெளியிட்டதாகக் கூறப்படும் அச்சுவேலி பிரதேசத்திலுள்ள இளைஞனின் வீட்டை சுமார் 500 பேர் கொண்ட குழு சோதனையிட்டபோது, பொலிஸார் வானத்தை நோக்கிச் சுட்டு, மிகவும் பிரயத்தனப்பட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## ஹஜ் தொழுகை

புனித ஹஜ் பெருநாள் விசேட தொழுகை, நாடளாவிய ரீதியில், பல்வேறு இடங்களிலும் வியாழக்கிழமை (29) காலை இடம்பெற்றது.




ஜப்பான் பறந்த விமானம்

## பாதிவழி சென்று மீண்டும் இலங்கைக்கு திரும்பியது




ஜப்பானின் நரிட்டா சர்வதேச விமான நிலையத்தை நோக்கிச் சென்ற ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மீண்டும் கட்டுநாயக்காவுக்குத் திரும்பியதாக பண்டாரநாயக்க சர்வதேச விமான

தொடர்ச்சி P2

## வருடாந்த பஸ் கட்டண திருத்தம் அமலாகாது



2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த பஸ் கட்டண திருத்தம் தற்போது தேவை இல்லை என்றும் இந்தத் தீர்மானத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்குத் தெரிவித்துள்ளதாகவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்க தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை (29) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

பணவீக்கம், ஒரு லீற்றர் டீசல் விலை, பராமரிப்பு செலவுகள் மற்றும் டயர்கள் மற்றும் இதர உதிரி பாகங்களின் விலை உள்ளிட்ட பன்னிரெண்டு காரணிகளை கணக்கில் கொண்டு, சிறப்பு சூத்திரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் ஜூன் 01 ஆம் திகதி வருடாந்த பஸ் கட்டண திருத்தம் அமல்படுத்தப்படும்.

தொடர்ச்சி P2

சின்னத் தேர்தல் விவகாரம்:

## சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறுவதற்கு தீர்மானம்



உள்ளூராட்சி மன்ற தேர்தலின் வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள யோசனை குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டு உள்ளதாக உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில், தமது அமைச்சின் சட்டப்பிரிவுக்கு அறிவித்துள்ளதாகவும் விடயம் குறித்து தற்போது நீதிமன்றில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# EPF,ETF நிதியங்களுக்கு எந்த சிக்கலும் ஏற்படாது

இதனூடாக இலங்கை மத்திய வங்கியால் விநியோகிக்கப்பட்டுள்ள முறிகள் மற்றும் ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை உள்ளிட்ட நிதியங்களில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள முறிகள் மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படும் எனவும் கூறினார்.

இதன் கீழ் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ள அனைத்து முறிகளையும் புதிய வட்டி வீதத்தின் கீழ் மீள விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

புதிதாக விநியோகிக்கப்பட்டுள்ள முறிகளுக்கு 2025 ஆம் ஆண்டு வரை 12 வீத வட்டி செலுத்தப்படுவதுடன் அதன் பின்னர் 9 வீத வட்டி பெற்றுக் கொடுக்கப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் இதன்போது கூறியுள்ளார்.

## அதிர்ஷ்டம் பார்க்கவும்...

விலை உயர்வுக்கு ஏற்ப பரிசுத் தொகை மற்றும் முகவர்களின் தரகுப் பணம் ஆகியவையும் அதிகரிக்கப்படும் என்று லொத்தர் சபைகள் அறிவித்துள்ளன.

இதேவேளை, லொத்தர் சீட்டுகளின் விலை அதிகரிக்கப்பட்டால், ஒரு லொத்தர் சீட்டுக்காக விற்பனை முகவர்களுக்கு தற்போது வழங்கப்படும் 3.75 ரூபாய் தரகுப் பணம் 8 ரூபாயாக அதிகரிக்கப்பட வேண்டுமென அகில இலங்கை லொத்தர் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் கிருசாந்த குறிப்பிட்டிருந்தார்.

தரகுப் பணத் தொகையை 8 ரூபாயாக அதிகரிக்காவிட்டால் லொத்தர் சீட்டுகளை விற்க முடியாத நிலை ஏற்படும் என்றும் தெரிவித்த அவர், விலையை அதிகரிப்பதில் லொத்தர் சீட்டுகளை வாங்குபர்களுக்கும் ஆட்சேபனை இருப்பதாக அவர்களுடனான உரையாடலில் இருந்து தெரியவருவதாக சுட்டிக்காட்டியிருந்தார்.

## இலங்கைக்கு 700...

வரவு செலவுத் திட்ட ஆதரவுக்காக 500 மில்லியன் டொலரும் நலன்புரி ஆதரவுக்காக 200 மில்லியன் டொலரும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலைத்தன்மையை மீட்டெடுக்கும் அடிப்படைச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் 700 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்க உலக வங்கியின் பணிப்பாளர் சபையானது அனுமதி அளித்துள்ளது.

வறுமையிலுள்ள மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுத்தல், தனியார் துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்கள், நிதி மறுசீரமைப்பை திட்டமிடல் ஆகியவற்றுக்கான ஒத்துழைப்புகளை வழங்கும் நோக்கிலும் இந்த நிதி பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் அளவு முன்னோடியில்லாதது என்றும் நாட்டின் பொருளாதார சிக்கலை மீளமைக்க ஆழமான சீர்திருத்தங்களுக்கான வரலாற்று வாய்ப்பை வழங்குகிறது என்று உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவித்தார்.

## குரங்குகள் தொல்லை ...

குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யும் வேலைத்திட்டம் தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ஆணைக்குழுக்களுக்கு...

அதன்படி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளராக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எல். டீ.பி. தெஹிதெனியவும், ஏனைய உறுப்பினர்களாக நிமலசேன கார்தியா புந்திஹேவா, தையமுத்து தனராஜ், பேராசிரியர் பர்சானா பாத்திமா, கலாநிதி தினுக் குணத்திலக்க ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் புதிய தவிசாளராக முன்னாள் மேலதிக தேர்தல் ஆணையாளர் ஆர். எம்.ஏ.எல் ரத்நாயக்கவும் ஏனைய உறுப்பினர்களாக எம்.ஏ.பத்மசிறி சந்திரவன்ச பெரேரா, அமீர் மொஹமட் பாயிஸ் உள்ளிட்டவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்

அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரைக்கு அமைய இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## விபத்தில் சிக்குண்டு...

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கத்தால் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்து சம்பவித்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விமானப்...

இலங்கை விமானப்ப டையின் தற்போதைய பதவி நிலை பிரதானியான எயார் வைஸ் மார்சல் உதேனி ராஜபக்ஷவுக்கு இன்று (30) முதல் அமலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியால் எயார் மார்ஷலாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

எயார் மார்சல் உதேனி ராஜபக்ஷ இந்நாட்டின் 19ஆவது விமானப்படை தளபதியாகவுள்ள நிலையில் அவர் கொழும்பு ஆனந்த கல்லூரியின் மாணவர் என்ற வகையில் ஆனந்த கல்லூரியில் உருவான முதலாவது விமானப் படைத் தளபதியாகவும் கருதப்படுவார்.

1988 ஆம் ஆண்டில் பயிலுநராக கொத்தலால பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டதோடு, அநுராதபுரம் முகாமில் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த அவர் முதலாம் இலக்க 33ஆவது விமானப்படை பயிற்சி பாடநெறியில் பங்குபற்றி பாடநெறியின் மிகச்சிறந்த பயிலுநராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

பின்னர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளில் விமானப்படை அதிகாரியாக பங்கேற்ற அவர் சிறப்பான திறன்களை வெளிப்படுத்தியுள்ளார். விமானப்படை தளபதியாக நியமனம் பெறுவதற்கு முன்பாக அவர் விமானப்படையின் இரண்டாம் நிலை அதிகாரியாக நியமனம் வகித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சட்டமா அதிபரிடம்...

சட்டமா அதிபரின் பரிந்துரையை பெற்றுக்கொண்டதன் பின்னர், அதனை அமைச்சின் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்யுமாறு, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் சிலரால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தேவையேற்பட்டால் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் தனிநபர் பிரேரணையாக பாராளுமன்றத்தில் சமர்பிக்க முடியும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் தலைமையில் அண்மையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற அமைச்சரவை ஆலோசனைக்குழு கூட்டத்தின் போது, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்வது தொடர்பான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வரி அறவீட்டு...

அதில் வரி அறவீடு தொடர்பிலான நடைமுறைப் பிரச்சினைகளை நிவர்த்தித்தல் தொடர்பிலான விசேட பரிந்துரைகளை உள்ளடங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார அடிப்படையில் பார்க்கையில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டியது முக்கிய விடயமாகும் என்றும் வருமான அதிகரிப்பின் போது வரி அறவீடுகளை சரியான முறையில் மேற்கொள்ள வேண்டியது முக்கியமாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

தற்போதும் வரி செலுத்தாமல் இருக்கின்ற மதுபான வகைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சிலவற்றுக்கு 14 தினங்களுக்கு வரிப் பணத்தை செலுத்தி முடிக்குமாறு விசேட கட்டளை ஒன்று விடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போதும் நாட்டில் சுயமாக வரிச் செலுத்தும் முறைமை ஒன்றே காணப்படுவதாகவும் அதனை மிக விரைவாக மாற்றியமைக்க வேண்டியது அவசியமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் வியாழக்கிழமை (29) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர், “அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்வதில் வரி சேகரிப்பு முக்கியமான காரணியாகும். வரி அதிகரிப்பால் மாத்திரமே அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்ளவும் முடியும். எவ்வாறாயினும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வரி சேகரிப்பது இலகுவானது அல்ல.

எவ்வாறாயினும் தற்போது வரி அறவீட்டுச் செயற்பாடுகள் மகிழ்ச்சிகரமான நிலையில் காணப்படுகின்றன. நாட்டின் நலன் கருதி சுயமாக வரி செலுத்திய மக்களுக்கு நன்றி. அவர்கள் ஓரளவிற்கு அரசாங்கத்தின் தேவையை புரிந்து கொண்டுள்ளனர்.

தற்போதும் 3 இலட்சம் பேர் மாத்திரமே வரி செலுத்துகின்றனர். அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு 10 இலட்சம் வரி ஆவணங்களாவது பேணப்பட வேண்டும். அதனை சரிவர செய்யும் பட்சத்தில் நாட்டின் ஒரு தொகுதி மக்கள் மீது மாத்திரம் சாட்டப்பட்டுள்ள வரிச்சுமையை மட்டுப்படுத்தலாம்.

அதேபோல் அரசாங்கம் மக்களிடத்திலிருந்து சேகரிக்கப்படும் வரிப்பணத்தை உரிய முறையில் செலவிடுவதில்லை. வரி பணத்தை செலவிட்ட விதம் தொடர்பில் 6 சுற்று நிருபங்கள் வாயிலாக அறிந்துகொண்ட முடிந்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தை போன்று சீரான முறையில் எந்த ஓர் அரசாங்கமும் வரி வருமானத்தை முகாமைத்துவம் செய்திருக்கவில்லை. அதனால் அரசாங்கம் பொது மக்களின் பணத்தை சிறந்த முறையில் பாதுகாக்கும்.

உதாரணமாக அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் உரியவர்களுக்கு மாத்திரம் சலுகைகளை பெற்றுக்கொடுக்கவே அரசாங்கம் முயல்கின்றது. அதற்கான தரவுகளை வழங்குவோர் உண்மையான தரவுகளை வழங்க வேண்டும்.

தற்போது நாட்டில் வரி செலுத்தாமல் இருக்கின்றவர்களிடத்தில் வரி அறவிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எமது நாட்டில் இருப்பது சுய விருப்பத்தின் பேரில் வரி செலுத்தும் முறைமையாகும். உதாரணமாக ஒருவருடைய வருமானம் யாதென அரசாங்கம் கேட்டறிந்த பின்னர் அரசாங்கமே வரி அறவீட்டினை தீர்மானிக்கின்றது.

நமது நாடு 83 பில்லியன் டொலர் கடன்பட்டுள்ளது. அதில் 41 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனாகவும் 42 பில்லியன் டொலர் உள்நாட்டு கடனாகவும் காணப்படுகின்றன. ஒரு நாடு என்ற வகையில் ஸ்திரமான சூழ்நிலையை உருவாக்க ஒவ்வொருவரும் சில அர்ப்பணிப்புக்களை செய்ய வேண்டும். அதற்கான முறைமைகள் பற்றியும் எதிர்காலத்தில் ஆராயலாம். எவ்வாறாயினும் தற்போது வீழ்ச்சியடைந்த நாட்டை கட்டியெழுப்ப முயல வேண்டும்.

தற்போது அஸ்வெசும திட்டத்தை குழப்பி சிலர் நாட்டை முடக்க பார்க்கிறார்கள். பாரம்பரிய எதிர்கட்சிகளின் கொள்கைகளுடன் மோத வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கை சாதாரண நாடாகும். இங்கு எவரேனும் சூழ்ச்சி செய்ய முற்பட்டால் நல்ல பலன்களை நாம் அடைய முடியாது” என்றார்.

## வருடாந்த பஸ்...

வருடாந்த பஸ் கட்டணத்தை கணக்கிட்டு 7 சதவீத பஸ் கட்டண உயர்வு இருப்பதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தமக்கு அறிவித்ததாக குறிப்பிட்டார்.

ஒரு சங்கமாக 7 சதவீத உயர்வை இந்த நேரத்தில் ஏற்க முடியாது என்று ஆணைக்குழுவுக்கு தெரிவித்தாக குறிப்பிட்ட அவர், கொரோனா காலத்தில் 20 சதவீத பஸ் கட்டண உயர்வு அமலானதாகவும் பின்னர், 10 சதவீதத்தால் குறைக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

## வீட்டை முற்றுகையிட்ட...

யுவதியின் நிர்வாணப் புகைப்படங்களை சமூக ஊடகங்களில் வெளியிட்டதாகக் கூறி உள்ளூர்வாசிகள் சிலரால் தாக்கப்பட்ட இளைஞனும் மீட்கப்பட்டுள்ளதாகவும், தாக்குதலில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதியின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவ்விளைஞன் பொலிஸ் பாதுகாப்பில் யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நிலைமையைக் கட்டுப்படுத்தச் சென்றபோது, வன்முறையாக நடந்துகொண்ட நபரின் தாக்குதலால் உதவி பொலிஸ் பரிசோதகரும் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

தெற்கு நீர்வேலி பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது சுமார் 500 பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்துவதாக பொலிஸ் 119 அவசர அழைப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இரவு நடமாடும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் குழு நிலைமையைக் கட்டுப்படுத்த முற்பட்டுள்ளனர்.

ஆனால் நிலைமையை கட்டுப்படுத்த முடியாததால், மற்றொரு சிறப்பு பொலிஸ் குழு அங்கு வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பாதிவழி சென்று மீண்டும்...

நிலையத்தின் கடமை நேர அதிகாரி தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் மிகப் பெரிய விமானமான எயார் பஸ் ஏ330-300 ரக யூஎல்-455 என்ற விமானம் செவ்வாய் (28) இரவு 8.20 மணியளவில் கட்டுநாயக்கவில் இருந்து ஜப்பானின் நரிடா சர்வதேச விமான நிலையத்தை நோக்கி புறப்பட்டது.

விமானத்தின் தரையிறங்கும் கியர் சரியாக மடிந்திருப்பதை விமானத்தின் கணினி அமைப்பு சுட்டிக்காட்டாததால், 2 மணி 25 நிமிடங்களுக்குப் பிறகு விமானத்தைத் கட்டுநாயக்கவுக்கு மீண்டும் திருப்ப விமானி தீர்மானித்தார்.

விமானத்தில் மொத்தம் 301 பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் இருந்தாகவும் மற்றொரு விமானத்தில் பயணிகளை ஜப்பானுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

# யாழ். மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் பலி



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், இளைஞன் ஒருவன் பலியாகியுள்ளான். மற்றுமோர் இளைஞன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று (29) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

அராலி வீதி, கல்லுண்டை சந்தி, மானிப்பாய் பொலிஸ் பிரிவில் அராலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த அப்பாச்சி மோட்டார் சைக்கிளும், யாழ்ப்பாணத்திலிருந்து அராலி நோக்கிப் பயணித்த பிளேஸர் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது.

அராலி மத்தி. வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஜெயசுந்தரம் சரோஜன் (வயது 29) என்பவரும், மற்ற மோட்டார் சைக்கிளில் பயணித்த சங்கரத்தையைச் சேர்ந்த மகேஸ்வரன் மயுரன் (வயது 37) என்பவரும் விபத்துக்குள்ளாகி காயமடைந்தனர்.

படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மகேஸ்வரன் மயுரன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# பெண் போராளிகளின் உடைகளுடன் மனித எச்சங்கள் மீட்பு


கெ.கீதாஞ்சன்

முல்லைத்தீவில் பெண் போராளிகளின் உடைகளுடன் மனித எச்சங்கள், வியாழக்கிழமை (29) இனம் காணப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்திய பகுதியில் தேசிய நீர்வளங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தினை தோண்டியுள்ளார்கள். இதன்போது மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன.

இந்தச் சம்பவத்தினை தொடர்ந்து கொக்கிளாய் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கொக்குளாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இது பெண் போராளிகளின் தடயங்களாக காணப்படுகின்றது. பெண்களின் மேலாடை மற்றும் பச்சை சீருடை மற்றும் எலும்பு எச்சங்கள் என்பன இதன்போது இனம் காணப்பட்டுள்ளன.





# ஹஜ் தொழுகை

புனித ஹஜ் பெருநாளை, உலகளாவிய ரீதியில் வாழும் முஸ்லிம்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடினர். இலங்கையில், ஹஜ் பெருநாள் விசேட தொழுகை, நாடளாவிய ரீதியில், பல்வேறு இடங்களிலும் வியாழக்கிழமை (29) காலை இடம்பெற்றது.

('தமிழ்மிரர்' நிருபர்கள்)

















"போலியான குற்றச்சாட்டுகள்

# விசமிகளால் முன்வைப்பு"

## தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்

■ எம்.எஸ்.எம் ஹனீபா

தென்கிழக்கு பல்கலைக்கழத்தின் வளர்ச்சியைத் தடுக்கும் நோக்கத்துடனும் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் சில விசமிகளால் போலியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாக, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழ ஒலுவில் வளாகத்தில் புதன்கிழமை (28) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே இதைத் தெரிவித்தார். பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

"நான் உபவேந்தராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், பல போலிக் கடிதங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டன. இதனால், உபவேந்தராக நியமிக்கப்பட்டு பதவியைப் பொறுப்பேற்பதற்கு குறிப்பிட்டகாலம் தாமதிக்க வேண்டியிருந்ததது.

இடைக்காலத்தில் எனது நியமனத்தை இரத்துச் செய்வதற்கு சில குழுவினர், சில சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் என்னை அகற்ற பகீரத முயற்சி எடுத்தனர். பல்கலைக்கழகத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் எனது நிர்வாகத்துக்கு முழு ஆதரவை வழங்கி வருகின்றனர்.

பதவியேற்றதும் பல்கலைக்கழக ஆளணியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, பல்கலைக்கழக நிர்வாகத்தினை ஒழுங்குபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தேன். மருத்துவ பீடம், பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம் ஆகிய இரண்டு பீடங்கள் புதிதாக ஆரம்பிப்கதற்கு, அனுமதிக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பட்டுள்ளது. எனது நிர்வாகம் சட்ட ரீதியாக முன்னெடுக்கப்பட்டது என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை உள்ளது.



அதன் காரணமாகவே, என்னை பதவியிலிருந்து அகற்றுவதற்கு எதிராக நீதிமன்றத்தை அணுகியுள்ளேன். மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டுள்ளது. என்னைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையும் விதித்துள்ளது" என்றார்.

காத்தான்குடியில் பெருநாளன்று அதிகாலை

# மோட்டார் சைக்கிள் விபத்து

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

புதிய காத்தான்குடியில் நேற்று (29) ஹஜ் பெருநாளன்று அதிகாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி கர்பலா வீதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள், கடற்கரை வீதி வழியாக சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றது.

இந்த விபத்தில், இரண்டு மோட்டார் சைக்கிளிலும் சென்ற 19, 20, 21 வயதுடைய இளைஞர்களே படுகாயமடைந்தனர். படுகாயமுற்ற மூவரும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

குறித்த இளைஞர்கள், மோட்டார் சைக்கிள்களை வேகமாக செலுத்தியதாகவும் தலைக் கவசம் அணிந்திருக்க வில்லை எனவும் காத்தான்குடி பொலிஸார் குறிப்பிட்டனர்.



# நற்பிட்டிமுனை அல் அக்ஸாவில் 'சித்திரச் சிதறல்'

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலய அதிபர் முஹம்மட் பதியுத்தீனின் நெறிப்படுத்தலில் ஆசிரியர் மொனோஜனின் வழிகாட்டலில், மாணவர்களின் ஆக்கங்கள் கண்காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை வலய கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் கலந்து சிறப்பித்திருந்தார்.

# வீட்டுக்குள் புகுந்து சங்கிலி அபகரிப்பு

■ சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன், ருவன்புர பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள், புதன்கிழமை (28) புகுந்த கொள்ளையர் ஒருவர், அந்த வீட்டிலிருந்த பெண்ணை அச்சுறுத்தி, அப்பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளார். அதன் பெறுமதி 13 இலட்சம் ரூபாய் ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

முகத்தை மறைத்துக்கொண்டு வீட்டுக்குள் புகுந்தே கொள்ளையன், தன்னுடைய கைவரிசையை காண்பித்துள்ளான்.

அந்தப் பெண்ணின் முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஜனாதிபதி சட்டத்தரணி சிற்றம்பலம் காலமானார்

■ க. அகரன்



வவுனியாவின் சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி மு. சிற்றம்பலம் நேற்று முன்தினம் (28) சுகவீனம் காரணமாக தனது 80ஆவது வயதில் காலமானார்.

வவுனியா மாவட்ட சபை முன்னாள் தலைவராகவும் பொது அமைப்புகளின் தலைவராகவும் வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தில் நீண்டகாலமாக தலைவராகவும் இருந்து வவுனியா மாவட்டத்துக்கு பல்வேறு உதவிகளை புரிந்திருந்தார்.

பண்டார வன்னியனின் சிலையை வவுனியா நகரில் நிறுவுவதற்கு, பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு. சிவசிதம்பரத்துடன் இணைந்து செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அன்னார், மு. சிவசிதம்பரம் மற்றும் வவுனியாவின் பிரபல ஆசிரியர் மு. கத்தப்புவின் சகோதரராவார்.

# 3 வாகனங்கள் கொள்ளை; 2 வாகனங்கள் சிக்கின

■ ஷேன் செனவிரத்ன

தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெங்கல்ல பிரதேசத்தில் வாகன விற்பனை நிலையத்தில் இருந்து டிப்பெண்டர் ரக வாகனங்கள் இரண்டு, கேடிஎச் வான் என்பன கொள்ளையடிக்கப்பட்டன. அதில், இரண்டு டிப்பெண்டர் ரக வாகனங்களும் சிசிமல்வத்த பிரதேசத்தில் உள்ள வாகனங்கள் திருத்தும் இடத்திலிருந்து வத்தேகம பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வாகன விற்பனை நிலையத்துக்கு வியாழக்கிழமை (29) அதிகாலை வேளையில் உள்நுழைந்த ஐவர் அடங்கிய கொள்ளைக் கோஷ்டி, அங்கிருந்த காவலாளியை கட்டி வைத்துவிட்டு, 12 கோடி பெறுமதியான வாகனங்கள் மூன்றை கடத்திச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், அஸ்கிரிய பொலிஸ் நாய் தலைமையகத்தில் இருந்து மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அது கைகூடவில்லை. எனினும், வத்தேகம பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இவ்விரு வாகனங்களும் மீட்கப்பட்டன.

அந்த டிப்பெண்டர்கள் இரண்டையும் கழற்றுவதற்கு தயாராகிக் கொண்டிருந்த போதே மீட்கப்பட்டன. அங்கிருந்த இருவர், வாகன திருத்தகத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மற்றுமொரு வாகனத்தை தேடி, கெங்கல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி பிராந்திய

# சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதவியேற்பு

■ மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக டொக்டர் சேரலாதன் நேற்று முன்தினம் (28) கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் முன்னர், அக்கராயன் வைத்தியசாலை பொறுப்பு வைத்தியராகவும் கிளிநொச்சி மாவட்ட பதில் திட்டமிடல் வைத்திய அதிகாரியாகவும் நீண்டகாலம் பணியாற்றியிருந்தார்.



திருக்கோவிலில்

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

■ அஸ்ஹர் இப்றாஹீம்

சாகாமம் பிரதேசத்தில் வயலில் காவலில் ஈடுபட்டிருந்த விவசாயியொருவர் நேற்று முன்தினம் நள்ளிரவு, காட்டு யானை தாக்கியதில் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சோதிநாதன் வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 56 வயதுடைய இரத்தினம் புஸ்பராஜா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பாக திருக்கோவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்துக்கு மைத்திரி மூன்று நாள் விஜயம்

■ டி. விஜித்தா

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாணத்துக்கான மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ளார். இந்த விஜயத்தின் போது, நேற்று (29) யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.



அதன்பின்னர், யாழ். நாகவிரைக்கு சென்று, வழிபாட்டில் ஈடுபட்டதுடன், நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

# சாதாரண மக்களின் வயிற்றில் அடியோடு அடித்துவிடவேண்டாம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டை பொறுப்பேற்று இருக்காவிடின், நாடு இன்று அதள பாதாளத்துக்குள் விழுந்து கிடக்கும்; மக்கள் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பார்கள்; ஜனநாயக ஆட்சியொன்று இருந்திருக்காது; வன்முறைகள் நிறைந்த நாடாகவே இருந்திருக்கும் என்று அரசாங்கத்துக்குச் சார்பானவர்கள் கூறுகிறார்கள்.

அத்துடன், அதிகரித்திருக்கும் பொருட்களின் விலைகள் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்கப்படுகின்றன. மக்கள் ஓரளவுக்கு தலையைத் தூக்கிக்கொண்டிருக்கின்றனர். வர்த்தகம் ஓரளவுக்கு சூடுபிடித்துள்ளது. இறக்குமதி கட்டுப்பாடுகள் முழுமையாகத் தளர்த்தப்படுமாயின், நிலைமை வழமைக்குத் திரும்பிவிடும் என்றும் கூறுகின்றனர்.

எனினும், நூற்றுக்கு இருநூறு சதவீதம் விலைகளை அதிகரித்துவிட்டு, அதில் சிறிய சதவீதத்துக்கே விலைகள் குறைக்கப்படுகின்றன என்று அரசாங்கத்துக்கு எதிரான தரப்பினர் விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

அத்துடன், 'நாட்டுப்பற்றாளர்கள்' எனத் தங்களை அடையாளப்படுத்தும் ஒரு கோஷ்டியினர், நாட்டையும் அரச நிறுவனங்களையும் வெளிநாடுகளுக்கு துண்டாடிவிட்டு, பொருளாதாரத்தில் தலைநிமிர்ந்து நிற்கின்றோமென அரசாங்கம் பம்மாத்துக்காட்டுகின்றது என்ற விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

இன்னுமொரு தரப்பினர், நாட்டில் என்ன நடந்தாலும் நமக்கென்ன; அன்றாடம் உண்டு, ஜீவியம் நடத்தும் வகையில், நிலைமை சுமூகமாக இருந்தால் போதுமென்றும், இன்னுமொரு தரப்பு, கிடைத்திருக்கும் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கிடைப்பதை சுருட்டிக்கொள்வோமெனவும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இதற்கிடையே, உள்ளூர் கடன் மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பில், அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றைச் செலுத்தும் ஒருவர், தன்னுடைய எதிர்காலத்தின் சேமிப்பாகவே அவற்றை நினைத்துக்கொண்டிருப்பார்.

எனினும், ஊழியர் நம்பிக்கை நிதி, ஊழியர் சேமலாப நிதி ஆகியவற்றிலும் கைவைக்கும் நோக்கத்துடனேயே இந்தச் சட்டமூலத்தை அரசாங்கம் சமர்ப்பிக்கின்றது என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆளும் கட்சிக்குள் இருந்தும் கடுமையான எதிர்ப்பலைகள் கிளம்பியுள்ளன.

பொருளாதார ரீதியில் நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமென்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், அப்பாவி மக்களின் வயிற்றில் அடித்துவிட்டு, ஆட்சியதிகாரத்தை தக்கவைத்துக்கொண்டிருக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

அந்தச் சட்டமூலத்துக்கு அமைச்சரவையில் அங்கிகாரம் கிடைத்தாலும், அமைச்சரவைக்குள் கடுமையான வாக்குவாதங்கள் ஏற்பட்டிருந்தன. ஆக, உள்ளேயும், வெளியேயும் இந்தச் சட்டமூலம் பாரிய எதிர்ப்பலைகளை கிளப்பிவிட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, வங்கிகளில் சிறுகச்சிறுக சேமித்து வைத்திருக்கும் பணத்திலும் கையை வைக்கும் சரத்துகள், உள்நாட்டு கடன் மறுசீரமைக்கும் சட்டமூலத்தில் இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. அவ்வாறெனின், அதுதொடர்பிலும் அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும். இல்லையேல், அரசாங்கத்தின் இருப்பை ஆட்டங்காணச்செய்துவிடும்.

மக்கள் தங்களுடைய வயிறு, வாயைக் கட்டி, அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கியிருக்கின்றனர். இனிமேலும், அதற்கான சந்தர்ப்பம் குறைவாகும். ஆக, சாதாரண மக்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாடுகளை கைவிட்டு, மக்கள் பாதிக்கப்படாத வகையில் நீண்டகாலத் திட்டங்களை வகுப்பதே உசிதமானது.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தேகம் மாயையானது; உயிர்கள் விலகும். பேசிக்கொண்டே மனிதன் அடங்கிப் போய்விடுகின்றான்.

மாற்றங்களுடன் உயிர்கள் பிணைந்துள்ளன. நடப்பவை மாறும். ஆனால், எல்லாமே உண்மை என உயிர்கள் கற்பனையுடன் சங்கமிக்கின்றன.

பிடித்தவரை பிடிக்காமல் போகலாம். பிடிக்காதவை மீது மோகமும் தொன்றலாம். பொய்மையை நம்பும் மாந்தர் கூட்டம், வீரம் பேசி மாய்ந்து போகின்றது.

விரும்பிய உறவுகளைப் பிரிப்பவன், ஏற்கமுடியாதவர்களுடன் போலியான வாழ்க்கை வாழுகின்றான். கடவுளைக் கும்பிட்டபடி, நடிப்போடு வாழும் மனிதர்கள் அதிகம்.

நேர்மையுடனும் நீதியுடனும் வாழ்ந்தால் தெய்வ ஞானம் கிட்டும். தன்னைத்தானே ஏமாற்றுகின்றவனுக்கு, அவனது நடவடிக்கை புரியும். புரியாமல் எவரும் தவறு செய்வதும் இல்லை.

மனிதன் தன்னை மட்டும் ஏமாற்றுவது இல்லை. படைத்தவனிடமும் நடிக்கிறான்; போலிகளுக்கே பிரியப்படுகின்றான். குறுக்குவழி சந்தோசம், தனக்குத் தானே இழுக்கு!

–பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

கறுப்பு ஜூலையின் 40 ஆண்டுகளின் பின்னர் 07:

# கொச்சிக்கடை கலவரம்: சில குணங்குறிகள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கொச்சிக்கடையில் 1883இல் கத்தோலிக்கர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மதரீதியான பதற்றம், கலவரமாக உருவெடுத்தது.

சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் தொடக்கத்துக்கான அறிகுறிகளை இங்கு காணவியலும். சகிப்புத்தன்மை இன்மை, பெரும்பான்மை மனநிலை, பேரினவாத அகங்காரம் என அனைத்தும் மறைமுகமாக வெளிப்பட்ட முக்கியமான தருணமாக, 1983 கொச்சிக்கடை கலவரத்தைக் கொள்ளவியலும்.

இருபதாம் நூற்றாண்டில் எதுவித முகமூடிகளுமற்று நேரடியாகவும் அரச கொள்கையாகவும் பெரும்பான்மை சமூகத்தால் சரியானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக, சிங்கள - பௌத்த பேரினவாதம், தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. இதற்கான குணங்குறிகளை, கொச்சிக்கடை கலவரத்தை உந்தித் தள்ளிய நிகழ்வுகளில் காணமுடியும்.

இந்தக் கலவரம் ஏன் கொழும்பில் நடந்தது? கொலனித்துவத்தின் வருகையோடு, இலங்கையின் பல பகுதிகளில் கத்தோலிக்க மதம் வெகுவாகப் பரவியிருந்தது. கொழும்பை விட, அதிகமான கத்தோலிகர்கள் வாழும் பகுதிகள் இலங்கை எங்கும் இருந்தன.

இப்பின்புலத்தில், பௌத்த-கத்தோலிக்க முரண்பாடு, ஏன் கொழும்பில் நடந்தது என்பது முக்கியமான வினாவாகும். வரலாற்று ரீதியாக கொழும்பு, முஸ்லிம்களின் குடியேற்றம் என்றே அறியப்படுகிறது. வாசனைத் திரவிய வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த அரேபிய மற்றும் இந்திய முஸ்லிம் வர்த்தகர்கள், கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தங்களுக்கென பொருட்களைச் சேமிக்கும் களஞ்சியங்களையும் குடியிருப்புகளையும் கட்டிக் கொண்டனர்.

வழக்கமாக இஸ்லாமிய நடைமுறையின்படி, தனி மசூதியை நிலைநிறுத்துவதற்கு அவர்களின் எண்ணிக்கை போதுமான அளவு அதிகரித்த போதெல்லாம், அவர்கள் மசூதிகளைக் கட்டினார்கள். போர்த்துக்கேயருக்கு முந்திய காலத்தில், சிங்கள அரசர்கள் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் முஸ்லிம்களின் இச்சமயச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தவில்லை. 15ஆம் நூற்றாண்டில், கோட்டே தலைநகராக மாறியபோது, நாட்டின் முக்கிய துறைமுகமாக கொழும்பு மாறியது.

1505இல் போர்த்துகேயர்கள் வந்தபோது, கொழும்பு துறைமுகமானது மசூதிகள், களஞ்சியசாலைகள், குடியிருப்புகளுடன் கூடிய ஒரு முஸ்லிம் குடியேற்ற இடமாக இருந்தது. அவர்களுக்கிடையே இருந்த கடுமையான வணிகப் போட்டியின் காரணமாக, போர்த்துக்கேயர்கள் முஸ்லிம்களை விரட்டினார்கள். நகரைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர்கள், படிப்படியாக அதை உரோமன் கத்தோலிக்க மத நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தினர். இதன்விளைவால் பிற மத நிறுவனங்கள் சிதைந்தன.

எனவே, 1656இல் போர்த்துக்கேயர்கள் இலங்கையை விட்டு வெளியேறும் வரை கொழும்பு, உரோமன் கத்தோலிக்க நகரமாக இருந்தது. போர்த்துக்கேயர்களிடம் இருந்து கொழும்பை கைப்பற்றிய டச்சுக்காரர்கள், ஏற்கெனவே இருந்த உரோமன் கத்தோலிக்க கட்டடங்களை, டச்சு சீர்திருத்த தேவாலயத்தின் நிறுவனங்களாக மாற்றினர்.

டச்சுக்காரர்கள், இலங்கையில் தங்கள் பிரதேசத்தின் முக்கிய நகரங்களில், தங்களுடைய மத நம்பிக்கையைத் தவிர மற்றவற்றை அனுமதிக்கவில்லை. எனவே, கொழும்பு நகரில் பௌத்த, இந்து, முஸ்லிம், உரோமன் கத்தோலிக்க மத மையங்கள், டச்சுக் காலத்தில் இருக்கவில்லை.

1760க்குப் பிறகு, ஒல்லாந்தில் மதச் சட்டங்கள் தளர்த்தப்பட்டதன் விளைவாக, டச்சுக்காரர்கள் உரோமன் கத்தோலிக்கர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு சுதந்திரத்தை அனுமதித்தனர். இதில் கவனிக்க வேண்டியது, ஒல்லாந்தர் காலத்தில், பௌத்தர்களுக்கு கொழும்பில் மத வழிபாடுகளுக்கான ஒரு தளம் இருக்கவில்லை.

1806ஆம் ஆண்டு, ஆங்கிலேயர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் அனைவருக்குமான மதச் சுதந்திரத்தை அனுமதித்தார்கள். அப்போது, கொழும்பு முழுமையான கிறிஸ்தவ நகராக மாறியிருந்தது. போர்த்துக்கேய, ஒல்லாந்து கால மதக்கொள்கைகள் இதற்கு முக்கிய பங்களித்தன.

பிரித்தானிய கொலனியாதிக்கவாதிகள் மத சகிப்புத்தன்மையை ஓரளவு கடைப்பிடித்தார்கள். இதன் விளைவால், விகாரைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக உருவாகத் தொடங்கின. அவ்வாறு கொழும்பில் உருவான விகாரைதான் 1883 கலவரத்தின் மையப்புள்ளியான 'திப்பட்டுதம' விகாரை. பௌத்தர்களைப் பெருமளவு கொண்டிராத கொழும்பில், ஒரு விகாரையின் உருவாக்கத்தை எவ்வாறு நாம் விளங்கிக் கொள்வது?

'பௌத்தர்கள், பௌத்தமல்லாத தலைநகர் கொழும்பில் கால்பதிப்பதன் ஊடு, தலைநகரைச் பௌத்த நகராக்கும் முயற்சியில் இறங்கினார்கள் என்றே கொள்ளவேண்டும். 1883 கலவரத்தை இந்த நோக்கத்துக்கான ஒன்றாகவே காணவேண்டி இருக்கிறது' என்று இக்கலவரம் குறித்து விரிவாகப் பதிவு செய்துள்ள பேராசிரியர் ஜி.பி.வி சோமரத்தன வாதிடுகிறார். இந்த வாதம் ஏற்கக் கூடியதே!

1880களில் கொழும்பில் இருந்து போக்குவரத்துப் பாதைகள் அமைக்கப்பட்டமையானது, நாட்டின் பிற பகுதிகளுடன் பொருளாதார இணைப்பை உருவாக்கியது. கொழும்பு துறைமுகத்துக்கு அதிக கப்பல்கள் அடிக்கடி வருவதால், வர்த்தகம் வேகமாக அதிகரித்தது. 1878இல் கொழும்பு துறைமுகம் நீராவி கப்பல்களுக்கான துறைமுகமானதோடு இலண்டனுக்கும் தூர கிழக்குக்கும் இடையிலான மத்திய தரிப்பிடமானது.

இதேகாலப்பகுதியில், இலங்கையில் கோப்பி பயிர் செய்கை மிகப்பெரிய சரிவைச் சந்தித்தது. 1880இல் கிறிஸ்தவ மதத்துக்கு வழங்கப்பட்டு வந்த சலுகைகள் நிறுத்தப்பட்டன. இக்காலத்தில், தேவாலயத்துக்கும் அரசுக்கும் இடையில் பாரம்பரியமாக நிலவி வந்த உறவு முடிவுக்கு வந்தது. இது, தேவாலயத்துக்கு மிகப்பெரிய பாதகமாக இருந்தது.

இலங்கையின் தென்பகுதியுடனான போக்குவரத்துத் தொடர்புகள், பல பௌத்தர்களை கொழும்பை நோக்கி நகர வைத்தது. அவ்வாறு வந்தவர்களில் பெரும்பான்மையானோர் வியாபாரிகள். அவர்களே, குறித்த விகாரையின் பிரதான அனுசரணையாளர்கள் ஆகினர்.

1883 கலவரம், இலங்கையின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகப் பதியப்படவில்லை. அதற்கான காரணங்கள் பல. குறிப்பாக, 2023ஆம் ஆண்டு, இணையத்தளத்தின் வழி உருவாக்கப்பட்ட மதச் சுதந்திர அருங்காட்சியகத்தில், இலங்கையின் மத முரண்பாடுகளின் வரலாறு, கால ஒழுங்கின்படி பதியப்பட்டுள்ளது. அதில், கொச்சிக்கடை கலவரம் குறித்த எந்தவொரு குறிப்பும் இல்லை. இன்றும் அந்நிகழ்வு முக்கியமற்ற ஒன்றாகவே கருதப்படுகிறது. ஆனால், குறித்த கலவரத்தை அடுத்த 20 ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்வுகள், இக்கலவரம் தவிர்க்கவியாத முக்கிய நிகழ்வு என்பதைக் கோடிட்டுக்காட்டுகிறது.

பௌத்த உயர்குடிகள், பௌத்த மதகுருமார், சிங்கள - பௌத்த புதிய வியாபாரிகள் போன்றோர் தாங்கள் செல்வாக்கற்று இருப்பதாக உணர்ந்தனர். அவர்கள் இணைந்து, கிறிஸ்தவர்களுக்கு எதிரான கூட்டணியை அமைக்கத் தொடங்கினர். இவர்களே, இந்தக் கலவரத்துக்கான அடிப்படைக் காரணகர்த்தாக்கள்.

சிங்கள - பௌத்த அதிகார வர்க்கம் நெருக்கடிக்கு உள்ளான நிலையில், அதிலிருந்து வெளியேறுவதற்கு கலவரத்தை ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்திய முதலாவது நிகழ்வு, கொச்சிக்கடைக் கலவரமாகும்.

அதேவேளை, இந்நிகழ்வைப் பயன்படுத்தி பௌத்தர்கள், பிரித்தானிய கொலனியாதிக்கவாதிகளிடம் சலுகைகளைப் பெற்றார்கள். இவர்கள், தாங்கள் கொலனியாதிக்கத்துக்கோ, பிரித்தானியர்களுக்கோ எதிரானவர்கள் அல்ல என்பதைத் தொடர்ச்சியாகத் தெரிவித்து, தங்கள் செயல்கள் மூலம் தமது விசுவாசத்தை நிரூபித்தார்கள்.

இந்தக் கலவரத்தோடு தொடர்புடைய மிகவும் முக்கியமான இன்னொரு நிகழ்வுண்டு. கொச்சிக்கடை பொலிஸார், குறித்த கலவரம் தொடர்பில் செயற்படுவதற்கு இலஞ்சம் வாங்கினார்கள் என்று செய்தி பத்திரிகைகளில் வெளியாகின. குறித்த பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பாக இருந்த இன்ஸ்பெக்டர் குணரத்தன, கிறிஸ்தவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட இலஞ்சம் வாங்கினார் என்று குணானந்தா தேரர் குற்றஞ்சாட்டினார்.

இது குறித்த விசாரணையில் சாட்சியமளித்த இன்ஸ்பெக்டர் குணரத்தன, "குணானந்தா தேரர், தனது ஆதரவாளர்களிடம் பணம் திரட்டி, பௌத்தர்களுக்கு ஆதரவாகச் செயற்பட 500 ரூபாயை பொலிஸாருக்கு இலஞ்சமாகத் தர முயன்றார்" என்று சாட்சியமளித்தார்.

இலங்கை பொலிஸாரால் இலஞ்சம் பெறப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகள் இதன்போது, பிரித்தானிய பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இன்ஸ்பெக்டர், தேரரை சிறுவயதிலிருந்தே அறிந்திருந்தார். இன்ஸ்பெக்டரின் மருமகன் தேரரின் சகோதரியின் மகளை மணந்ததன் விளைவாக, இவர்களது உறவு நெருங்கியது. தேரருக்கும் இன்ஸ்பெக்டருக்கும் இடையிலான சுமூகமான உறவு, 1883 கலவரம் நடந்த நாள் வரை தொடர்ந்தது.

இன்ஸ்பெக்டருக்குத் தேவை ஏற்படும் போதெல்லாம், பணக்கார வர்த்தகர்களிடம் கடன் வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர், கலவரம் இடம்பெற்ற தினத்தில் கொட்டாஞ்சேனையில் உள்ள தனது பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியேறி, தனது பொறுப்பின் எல்லைக்கு உட்படாத பொரளையில் இருந்து, பௌத்த ஊர்வலத்துடன் சென்றார்.

முக்கியமாக, அந்தக் காலப்பகுதியில் அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாமல் தடுப்பதற்காக வந்திருந்த இரண்டு சார்ஜன்ட்களுக்கும் சுமார் முப்பது கான்ஸ்டபிள்களுக்கும் அவர் ஊர்வலத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்கவில்லை. ஒருபுறம் இவர் கடமையைச் செய்யாது தவறிழைத்தார் என்று பொலிஸாரும், தனக்கு ஆதரவாகச் செயற்படவில்லை எனத் தேரரும் இவர்மீது அதிருப்தியடைந்தனர். இதன் விளைவாகவே, இவர் மீதான ஊழல் குற்றச்சாட்டை இவருக்கெதிராக தேரர் முன்வைத்தார்.

இலங்கையில் சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கு மட்டுமல்ல, ஊழலுக்கும் நூற்றாண்டு தாண்டிய வரலாறுண்டு.

## கடிதங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில்

### உவராக மாறும் பயிர்செய்கை நிலங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அதிகளவான விவசாயக் காணிகள், உவர் நிலங்களாக மாற்றமடைந்துள்ளன. 1,672 ஹெக்டேயர் நிலப்பரப்பு உவர் நிலங்களாகவும் 643 ஹெக்டேயர் நிலப்பரப்பில் எந்தவித பயிர்செய்கைகளும் மேற்கொள்ள முடியாமலும் காணப்படுகின்றன.

குறிப்பாக, கரையோரப் பகுதிகளில் காணப்பட்ட உவர்நீர் தடுப்பணைகள் சேதமடைந்துள்ளமை, கடல் நீர் உட்புகுதல் என்பவற்றின் காரணமாக, உவர்பரம்பல் அதிகரிப்பதாக விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அதாவது, உருத்திரபுரம், வன்னேரிக்குளம், பள்ளிக்குடா, பூநகரி, நல்லூர் போன்ற பிரதேசங்களில் சுமார் 1,672 ஹெக்டேயர் நிலப்பரப்பு, உவர் நிலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 1,029 ஹெக்டேயர் நிலப்பரப்பு விவசாயிகளால் பயிர் செய்கைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், மிகக்குறைவான விளைச்சலையே பெறுவதுடன், சில இடங்களில் உவர் பாதிப்பு காரணமாக பயிர் செய்கைகள் அழிவடைந்தும் வருகின்றன. ஏனைய, 643 ஹெக்டேயர் நிலப்பரப்பு, எந்தவித பயிர் செய்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலப்பரப்பாகக் காணப்படுகின்றது.

எதிர்காலத்தில், மண்டைக்கல்லாற்றுக்கான உவர்நீர்த்தடுப்பணை அமைத்தல், ஏனைய கரையோரப் பகுதிகளில் உவர் நீர்த்தடுப்பணைகளை அமைப்பதன் மூலம், இவ்வாறன உவர் நிலங்களை பயிர்ச் செய்கை நிலங்களாக மாற்றியமைக்க முடியுமென நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது.

யது பாஸ்கரன்




# SLT-MOBITEL 'ரெயின்போ பேஜஸ்' புதிய பதிப்பு வெளியீடு

நாட்டில் வியாபாரத்தை முன்னெடுப்பதற்கு மிகவும் வலிமையான சந்தைப்படுத்தல் சாதனமாக அறியப்படும் SLT-MOBITEL இன் தேசிய வியாபார தொலைபேசி இலக்கக் கோவையின் 2023/24 'ரெயின்போ பேஜஸ்', நுண், சிறு மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களின் உள்நாட்டு தேடல்களுக்கு வசதியளிக்கின்றது. நாடு முழுவதையும் சேர்ந்த நிறுவனங்களுக்கு டிஜிட்டல் யுகத்தில் போட்டிகரத் தன்மையை வழங்குவதாக அமைந்துள்ளது.

பாவனையாளர்கள் மற்றும் வியாபாரங்களை உள்நாட்டு மற்றும் உலகின் புகழ்பெற்ற உற்பத்தியாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்களுடன் இணைப்பதில் நம்பிக்கையை வென்ற வியாபார தொலைபேசி இலக்கக் கோவையாக 'ரெயின்போ பேஜஸ்' வியாபார தொலைபேசி இலக்கக் கோவை அமைந்துள்ளது.

இன்று, 'ரெயின்போ பேஜஸ்' வியாபார தொலைபேசி இலக்கக் கோவை, இலங்கையின் ஏக தேசிய வியாபார தொலைபேசி இலக்கக்கோவை எனும் நிலையை தன்னகத்தே கொண்டுள்ளது. 6,000 க்கும் அதிகமான வியாபார ஸ்தாபனங்கள் மற்றும் 170,000 க்கும் அதிகமான சிறு விளம்பரங்கள் போன்றன தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பிரிவில் பட்டியல் இடப்பட்டுள்ளன. மேலும், நாட்டின் சகல பொருளாதாரப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்தத் தொலைபேசி இலக்கக் கோவை அமைந்துள்ளதுடன், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களின் விவரங்களும் அடங்கியுள்ளன.

கடந்த காலங்களில், நுண், சிறிய, நடுத்தரளவு முதல் பாரியளவு வியாபாரங்கள் என அனைத்தும், 'ரெயின்போ பேஜஸ்' வியாபார தொலைபேசி இலக்கக் கோவையில் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், தமது வாடிக்கையாளர்களுக்கு சம்பந்தப்பட்ட தகவல்களையும் பரிமாறப் பயன்படுகின்றது.

இந்தத் தொலைபேசி இலக்கக் கோவை, டிஜிட்டல் கோவையாகவும் அச்சு வெளியீடாகவும் கிடைக்கின்றது. உற்பத்தியாளர்கள், சப்ளையர்கள், தயாரிப்பாளர்கள், சேவைத் துறைகள், பாரியளவு வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக தொடர்பு கொள்ளக்கூடிய வசதிகளை வழங்குகின்றது.

முக்கியமாக, தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு, மெருகேற்றம் செய்யப்பட்டுள்ள இந்த டிஜிட்டல் தொலைபேசி இலக்கக்கோவையான 'rainbowpages.lk' தொடர்ந்தும் அச்சு வெளியீட்டைக் கொண்டுள்ளது. இணையத்தளத்துக்கு தினசரி 10,000 பார்வையாளர்களை பதிவு செய்த வண்ணமுள்ளது. அதிகளவு போட்டிகரத்தன்மை வாய்ந்த சந்தையில் வியாபாரங்களுக்கு சிறந்த வளர்ச்சியை எய்துவதற்கு, 'ரெயின்போ பேஜஸ்' உடன் விளம்பரப்படுத்திக் கொள்வது சிறப்பானதாகும்.

'ரெயின்போ' வியாபார தொலைபேசி இலக்கக் கோவை என்பது, சகல அளவுகளையும் சேர்ந்த வியாபாரங்களுக்கு தமது பாவனையாளர்களை வினை த்திறனான வகையில் சென்றடைவதற்கு அவசியமான தேடலின் வலிமையினூடாக இணைப்பை ஏற்படுத்திக் கொள்ள உதவியாக அமைந்துள்ளது. உள்நாட்டு வியாபாரங்களுடன் நுகர்வோருக்கு தொடர்புகளை ஏற்படுத்தி, ஈடுபாட்டைக் கொண்டிருப்பதற்கு உதவும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த வியாபாரங்களின் தகவல்களைக் கொண்ட கட்டமைப்பாக இந்தத் தொலைபேசி இலக்கக் கோவை அமைந்துள்ளது. மேம்படுத்தப்பட்ட காட்சியமைப்புகளுடன், அவர்களால் பரந்தளவு வாடிக்கையாளர்களை சென்றடையக்கூடியதாக இருக்கும் என்பதுடன், புதிய வாடிக்கையாளர்களை கவரக்கூடிய வாய்ப்புகளையும் அதிகரித்துக் கொள்ள முடியும்.

அரச நிறுவனங்கள் தமக்கு அவசியமான பொருட்கள், சேவைகளுக்கு விலைமனுக்கோரல்களை மேற்கொள்ளும் போது, Rainbow Pages Directory இல் பதிவு செய்யப்பட்டுள்ள சேவை வழங்குநர்களை பயன்படுத்துமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது. மேலும், தேசிய வியாபாரக் கோவையில் பட்டியலிடப்பட்டுள்ள அமைப்புகளுக்கு, அரசாங்கத்தின் விலைமனுக்கோரல்களுக்கு விண்ணப்பிக்கும் தகைமையும் கிடைக்கின்றது.

அச்சுக் கோவைக்கு மேலதிகமாக, தகவல்களை நவீன டிஜிட்டல் கோவைக் கட்டமைப்புகளான மொபைலில் பார்வையிடக்கூடிய வகையில் செம்மைப்படுத்தப்பட்ட இணையத்தளமான rainbowpages.lk, மொபைல் App, கோவை CD மற்றும் 24 மணி நேர அழைப்பு நிலைய சேவை (SLT 1212 மற்றும் மொபைல் 444) போன்றவற்றினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

SLT Digital Services (Pvt) Limited (SLT-DIGITAL) என்பது SLT-MOBITEL இன் முழு உரிமையாண்மையின் கீழ் இயங்கும் துணை நிறுவனமாகத் திகழ்வதுடன், ரெயின்போ பேஜஸின் பெருமைக்குரிய வெளியீட்டாளராகவும் திகழ்கின்றது. மேலும், நிறுவனம் டிஜிட்டல் சந்தைப்படுத்தல், இணையத்தள வடிவமைப்பு, பராமரிப்பு, நிகழ்வு முகாமைத்துவம், செயற்படுத்தல், வர்த்தக நாம சேவைகள் போன்றவற்றில் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளது. மென்பொருள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தொடர்பாடல் தீர்வுகள், உட்கட்டமைப்பு, சேவைகள் ஒதுக்கீடுகள் போன்றவற்றிலும் நிறுவனம் தன்னை ஈடுபடுத்தியுள்ளது.

# 'ரிட்ஸ்பரி ரிலே கானிவல்' 2023 விறுவிறுப்பாக நிறைவு

இலங்கையின் இளைஞர்களின் மெய்வல்லுநர் திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'ரிட்ஸ்பரி ரிலே கானிவல் - 2023' வெற்றிகரமாக நிறைவடைந்தது. கொழும்பு சுகததாஸ மைதானத்தில் மூன்று நாள்கள் இடம்பெற்ற இந்தப் போட்டிகளை கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சம்மேளனம் (SLSAA) ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. இலங்கையின் முதல்தர சொக்லட் வர்த்தக நாமமான 'ரிட்ஸ்பரி' இந்நிகழ்வுக்கு ஏக அனுசரணை வழங்கியிருந்தது.




திறன்கள், விடாமுயற்சி, விளையாட்டுப் பண்பு போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றதுடன், இதில் நாடு முழுவதையும் சேர்ந்த 220 பாடசாலைகளின் 4,000 க்கும் அதிகமான போட்டியாளர்கள் பங்கேற்று, பல்வேறு பிரிவுகளில் போட்டியிட்டிருந்தனர்.

நீர்கொழும்பு, மாரிஸ் ஸ்டெலா கல்லூரியின் அணியினர் தமது திறமையை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்ததுடன், ஆண்கள் பிரிவில் 95 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தை வென்றனர். கண்டி திரித்துவக் கல்லூரி அணி இரண்டாம் இடத்தையும், கொழும்பு புனித பத்திரிசிரியார் கல்லூரி அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

வலல ஏ. ரத்நாயக்க மத்திய கல்லூரி அணி பெண்கள் பிரிவில் 113 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தை சுவீகரித்திருந்தது. லைசியம் சர்வதேச பாடசாலை அணி இரண்டாமிடத்தையும், அம்பகமுவ மத்திய கல்லூரி மூன்றாமிடத்தையும் சுவீகரித்திருந்தன.




## பூநொச்சிமுனையில் ஆய்வு கருத்தரங்கு

குறைந்த முதலீட்டில் நவீன மீன்பிடி முறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், நிலையான மீன் உற்பத்தியை அதிகரித்தல் எனும் தொனிபொருளிலான ஆய்வு கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை (25) பூநொச்சிமனை துறைமுகத்தில் உள்ள ரெசிடென்ஸ் வள வளாகத்தில் நடைபெற்றது. தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தி ஆராய்ச்சி மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கருத்தரங்கில், தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர்களான ஏ.எல் அப்துல் ரவூவ், ஏ.எம்.எம் முஸ்தபா ஆகியோரின் தலைமையிலான ஆய்வுக் குழுவினர் கலந்து கொண்டிருந்தனர். நிகழ்வின் சிறப்பு வளவாளராக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம். ஐயூப் கலந்து கொண்டிருந்தார். இக் கருத்தரங்குக்கான ஒருங்கிணைப்பு பணிகளை பூநொச்சிமுனை அல் பரக்கத் கிராமிய மீனவர் அமைப்பு மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எம்.எஸ்.எம் நூர்தீன்



## காசநோயைக் கண்டறியும் பயிற்சி



முதியவர்களிடையே காசநோயைக் கண்டறியும் முயற்சியில், அம்பாறை மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டொக்டர். ஏ.எல் அப்துல் கபூரால் மாவட்ட மார்பு சிகிச்சை மையத்தில் செவ்வாய்க்கிழமை (27) பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம் றிபாஸ் கலந்து கொண்டு, ஆலோசனைகளை வழங்கினார். டொக்டர் ஏ.எச். எம். டி மபாஸ் கலந்து கொண்டு, வீட்டில் இருக்கும் முதியோர்களுக்கான சுகாதாரம் என்ற தலைப்பில் விளக்கவுரை வழங்கினார். இந்நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவிச்சிகள், பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

நூருல் ஹுதா உமர்



## தொழிற்சந்தை




தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுத்தல் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்கும் நோக்கத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலகத்தில் பிரதேச மட்ட தொழிற்சந்தை நேற்று முன்தினம் (28), பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும், கண்டாவளை பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இத்தொழிற்சந்தை, மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் கண்டாவளை பிரதேச செயலக மனிதவள உத்தியோகத்தர் ல. பகீரதி தலைமையில் நடைபெற்றது. கண்டாவளை உதவி பிரதேச செயலாளர் சு. துவாரகா பிரதம அதிதியாக கலந்து கொண்டு, தொழிற்சந்தையை ஆரம்பித்து வைத்தார். இதன்போது, கண்டாவளை பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் அ. சிம்சன்போலும் கலந்து கொண்டிருந்தார்.

தொழிற்சந்தையின் நோக்கம், தொழில் விருத்திக்கான தகைமைகளை வளர்த்துக்கொள்ளல் தொடர்பாக, மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் சி. சிவசொரூபன் விளக்கமளித்திருந்தார். நிகழ்வில் 15 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்துகொண்டதுடன், இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டு பயன்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுப்பிரமணியம் பாஸ்கரன்

## கலைப் பேரவையின் வெள்ளி விழா

கடந்த 25 வருடங்களாக புஸ்ஸலாவைப் பிரதேசத்தை களமாகக் கொண்டு, மலையக நாடகக் கலை மற்றும் கலை கலாசார பண்பாட்டு வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பைச் செய்து வரும் மலையக நட்சத்திரக் கலைப் பேரவையின் வெள்ளி விழா நிகழ்வு, புஸ்ஸலாவை சரஸ்வதி மத்திய கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்றது.

மலையக நட்சத்திரக் கலைப் பேரவையின் வெள்ளி விழாவையொட்டி, மலையகத்தின் பல்துறை சார்ந்த சாதனையாளர்கள் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்படுவதோடு கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பேரவையின் தலைவர் மலையக வாசுதேவன் (எம். வாசகம்) தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

மெய்யன்










## மகாகும்பாபிஷேகம்



காரைதீவு, மாவடி ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் (28) சிவாச்சாரியார் சிவாச்சார்யதிலகம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. பிரதான தூபிக்கான கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் நடத்தி வைக்க, ஏனைய பரிவார மூர்த்திகளுக்கான கும்பாபிஷேகமும் சமகாலத்தில் இடம்பெற்றது. கோவில் பிரதம குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா பிரதான கும்பம் தாங்கி, பக்தர்கள் புடைசூழ வலம் வந்தார்.

வி.ரி சகாதேவராஜா

## செயலமர்வு



திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தால் புகைப்பட கலைஞர்களை உருவாக்கல் எனும் தொனிப்பொருளில், கரித்தாஸ் மிசெரியோவின் நிதியுதவியுடன் திருகோணமலை உள்ள 60 இளையோர்களுக்கான செயலமர்வு, தீபம் நிலையத்தில் நேற்று முன்தினம் (28) நடைபெற்றது.

திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி கலாநிதி பி. போல் றொபின்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வளவாளர்களாக கே. கெப்ரியல் குமார், ஜே. ஜெயகிறிஸ்டி பங்குபற்றி இருந்தனர்.

அ. அச்சுதன்





# விதைப்பையை நசுக்குவது கொலை முயற்சியாக கருதப்படாது



விதைப்பையை நசுக்குவது கொலை முயற்சியாக கருதப்படாது என கர்நாடகா உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு பேசுபொருளாக மாறியுள்ளது.

கர்நாடகா மாநில உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கின் மேல் முறையீட்டு மனு தொடர்பாக வழங்கப்பட்ட தீர்ப்பு விவாதத்தை கிளப்பியுள்ளது. 2010ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவம் தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றம் இந்த தீர்ப்பு வழங்கியுள்ளது.

கர்நாடகாவின் சிக்மகளூரு மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஓம்காரப்பா. 2010இல் அங்கு நரசிம்மசாமி கோயில் திருவிழா ஊர்வலத்தில் ஓம்காரப்பா பாடல்களுக்கு ஜாலியாக நடமாடி வந்துள்ளார். அப்போது உற்சாக மிகுதியில் சாலையில் வந்தவர்களை வழிமறித்த படி ஓம்காரப்பா ஆட்டம் போட்டுள்ளார்.

அப்போது அவ்வழியாக வந்த பரமேஷ்ரவப்பா என்பவரையும் அவர் வழிமறிக்கவே இருவருக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டு அது அடிதடியாக மாறியுள்ளது. இந்த சண்டையின் போது ஓம்காரப்பாவின் விதைப்பைகளை நசுக்கி பரமேஷ்ரவரப்பா தாக்கியுள்ளார். பாதிக்கப்பட்ட விதிப்பையை மருத்துவர்கள் அறுவை சிகிச்சை மூலம் நீக்கினர்.

இந்த சம்பவம் தொடர்பாக காவல்துறையில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்றது. பரமேஷ்வரப்பாவின் மீது கொலை முயற்சி பிரிவிலும் வழக்கு பதிவு செய்தது. வழக்கை விசாரித்த கீழமை நீதிமன்றம் 2012இல் பரமேஷ்ரவாவை குற்றவாளி என தீர்ப்பளித்த 7 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கியது.

இந்நிலையில், இந்த தீர்ப்புக்கு எதிராக பரமேஷ்வரப்பா உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செயதார். இந்த மேல் முறையீட்டு மனுவின் தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியது. உயர் நீதிமன்ற நீதிபதி கே நடராஜன் வழங்கிய அந்த தீர்ப்பில், "உடலில் விதைப்பை முக்கியத்துவம் வாய்ந்த உறுப்புதான். பாதிக்கப்பட்ட நபருக்கு அறுவை சிகிச்சை செய்து விதைப்பை அகற்றப்பட்டது.

இருப்பினும், தாக்குதலில் ஈடுபட்ட நபர் கொலை செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்தில் அதை செய்ததாக பார்க்க முடியாது. கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கம் இருந்தால் அவர் தன்னுடன் ஆபத்தான ஆயுதங்களை எடுத்து வந்திருப்பார். எனவே, கொலை முயற்சியாக இதை பார்க்க முடியாது என தீர்ப்பு வழங்கினார். எனவே, பரமேஷ்வராவுக்கு வழங்கப்பட்ட 7 ஆண்டு சிறை தண்டனையை 3 ஆண்டுகளாக குறைத்து தீர்ப்பளித்தார்.

# இறந்தவர்கள் உடல்களுடன் டைட்டன் நீர்மூழ்கி மீட்பு



கடலுக்குள் உடைந்து கிடக்கும் டைட்டானிக் கப்பலின் சிதிலங்களை பார்க்க டைட்டன் என்ற மினி நீர்மூழ்கி கப்பலில் சென்ற கோடீஸ்வரர்கள் 5 பேர் கப்பல் வெடித்து பலியான சம்பவம் உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

டைட்டானிக் கப்பலை பார்வையிட சென்ற டைட்டன் நீர்மூழ்கிக் கப்பலின் உடைந்த பாகங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், அதில் இறந்தவர்களின் உடல்களும் காணப்படுவதாக தகவல் வெளியாகிள்ளது.

அமெரிக்க கடலோர காவல்படை வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்க மருத்துவ நிபுணர்களால் முறையாக பகுப்பாய்வு செய்ய

டைட்டானிக் கப்பலை பார்வையிடுவதற்கான பயணத்தின் போது வெடித்த ஓஷன் கேட் டைட்டன் நீர்மூழ்கிக் கப்பலில் ஐந்து பேர் இருந்தனர். இந்த நிலையில், ஜூன் 28ம் திகதி டைட்டன் நீர்மூழ்கிக் கப்பலின் உடைந்த பாகங்கள் பல மீட்கப்பட்டன.

இதனையடுத்து கனடாவின் நியூபவுண்ட்லாண்ட் மாகாணத்தின் செயின்ட் ஜான்ஸ் கடற்பகுதிக்கு கொண்டுசெல்லப்பட்டது. கடந்த 1912ம் ஆண்டில் விபத்துக்குள்ளான டைட்டானிக் கப்பல் தற்போது கனடாவின் நியூபவுண்ட்லாண்ட் தீவுக்கு 740 கி.மீ. தொலைவிலுள்ள கடல்படுகையில் காணப்படுகிறது.

இதனைப் பார்வையிடும் பொருட்டு சுற்றுலா பயணிகளை அழைத்துச் செல்வதற்காக ஓஷன்கேட் எக்ஸ்பெடிஷன்ஸ் என்ற அமெரிக்க தனியார் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் கடந்த 18ம் திகதி பயணப்பட்டுள்ளது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக புறப்பட்ட 1.45 மணி நேரத்தில் அந்த நீர்மூழ்கிக் கப்பல் அழுத்தம் காரணமாக வெடித்துச் சிதறியது.



# கள்ளக்காதலனின் ஆணுறுப்பை வெட்டிய கள்ளக்காதலி

உத்தரப்பிரதேச மாநிலம்ஜ காங்கிராபாத் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட கிராம் ஒன்றில், 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஜோடிக்கு திருமணம் நடந்தது. திருமண வாழ்க்கை இருவருக்கும் நன்றாக சென்று கொண்டிருந்த நிலையில், அந்தப் பெண்ணுக்கு தனது மாமியார் வீட்டின் பக்கத்தில் வசிக்கும் ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. பின்னாளில் இந்த நட்பு கள்ளக்காதலாக மாறிய நிலையில், இருவரும் ஊரை விட்டு வெளியேறி உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்பாக கள்ளக் காதல் ஜோடிக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து ஒரு வாரத்திற்கு முன்பாக மீண்டும் தன் கணவரின் வீட்டிற்கு வந்த அந்தப் பெண், கணவரிடம் மன்னிப்பு கேட்டு மீண்டும் அவருடன் சேர்ந்து வாழத் தொடங்கினார்.

இருப்பினும், தனக்கு துரோகம் செய்ததாக கருதி ஆண் நண்பர் மீதான கோபம் அந்த பெண்ணுக்கு தணியவில்லை. இந்நிலையில் பிரிந்துசென்ற கள்ளக் காதலன் பெண்ணின் வீட்டிற்கு ரகசியமாக கடந்த திங்களன்று வந்து, உறவு கொள்ளுமாறு வற்புறுத்தத் தொடங்கினார். அவர் மீது ஏற்கெனவே ஆத்திரத்தில் இருந்த காதலி, கூர்மையான ஆயுதத்தால் கள்ளக்காதலனின் அந்தரங்க உறுப்பை வெட்டினார். அலறி துடித்த அந்த நபரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அப்பெண் தப்பியோடி தலைமறைவாகிவிட்டார்.

# மாணவிகளின் கவனத்துக்கு




மாணவிகள் வாட்ஸ்அப் DP-யில் தங்கள் புகைப்படங்களை வைக்க வேண்டாம் என மாநில மகளிர் ஆணையத் தலைவர் குமாரி அறிவுறுத்தியுள்ளார்.

பெண்களுக்கான உரிமைகள் மற்றும் பெண்களுக்கான அதிகாரம் அளித்தல் தொடர்பான கருத்தரங்கம் சென்னை தண்டையார்பேட்டை நடைபெற்றது. தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவர் குமாரி, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் திலகவதி, ஆதிலட்சுமி, லோகமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டு பெண்களுக்கான உரிமைகள் குறித்து சிறப்புரையாற்றினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய குமாரி, தொழில்நுட்பத்தில் எந்த அளவுக்கு நன்மை உள்ளதோ, அதே அளவுக்கு தீமை இருப்பதாகவும், பெண்கள் கவனமுடன் இருக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

# வேலைக்காக திருமணமான பெண்களுடன் உடலுறவு


அரசு வேலை வாங்கி தருவதாக கூறி திருமணமான பெண்களை ஏமாற்றிய ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுடன் உடலுறவில் ஈடுபட்டு அதனை வீடியோவாக பதிவு செய்துள்ளார்.

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ளது சேமகோட்டை ஊராட்சி ஒன்றியம். இந்த கிராமத்தில் மணிவண்ணன் என்பவர் ஊராட்சி தலைவராக இருந்து வருகிறார். இந்தநிலையில் கடந்த சில நாட்களாக பல்வேறு இணையதளங்களில் மணிவண்ணன் பல பெண்களுடன் நெருக்கமாக இருப்பது போன்ற வீடியோக்கள் வெளியாகின. இதனால் அதிர்ச்சி அடைந்த கிராமத்தினர், கடலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் மனு அளித்தனர்.

அதில் மணிவண்ணன் தங்கள் கிராமத்தை சேர்ந்த குடும்பப் பெண்களிடம் அரசு வேலை வாங்கி தருவதாகவும், பல்வேறு சலுகைகள் பெற்றுத் தருவதாகவும் கூறி தவறான உறவில் இருந்துவிட்டு, அதனை அவரது செல்போன் மூலமே வீடியோவாக எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் பொலிஸாரினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# அந்தரங்க உறுப்பில் பூட்டு மாட்டிய காதலன்

### சாவியை தர மறுத்த காதலி



தனது காதலியுடன் உடலுறவில் விளையாட அந்தரங்க உறுப்பில் பூட்டு போட்ட நபர் அதை திறக்க முடியாமல் சுத்தியல் வைத்து உடைத்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டில் ஒரு நபர் தனது காதலிக்காக தனது அந்தரங்க உறுப்பை பூட்டு போட்டு பூட்டி பின்னர் ஆபத்தில் மாட்டிக்கொண்டார். பின்னர் அந்த பூட்டை சுத்தியல் வைத்து உடைக்கும் சூழலுக்கு தள்ளப்பட்டார்.

இந்த வினோத சம்பவம் லா டுர்டா பியர்சர் (La Tuerta Piercer) என்ற டாட்டூ கலைஞரின் டிக் டாக் வீடியோ மூலம் வெளிவந்து வைரலாகியுள்ளது. காதலின் உச்சத்தில் காதலர்கள் வித விதமான விளையாட்டுகளில் ஈடுபடுவதை நாம் கேள்விபட்டிருப்போம். அப்படித்தான் ஸ்பெயினின் பார்சிலேனாவைச் சேர்ந்த நபர் தனது பார்ட்னருடன் செக்ஸ் கேம் விளையாடும் விதமாக பூட்டு ஒன்றை வாங்கி வந்துள்ளார்.

அந்த பூட்டை வைத்து தனது அந்தரங்க உறுப்பை பூட்டி அந்த சாவியை காதலியிடம் கொடுத்துள்ளார். இருவருக்கும் விருப்பம் ஏற்படும் போது மட்டும் சாவியை வைத்து திருந்து இருவரும் உறவில் ஈடுபட்டு வந்துள்ளனர். 8 மாதங்களுக்கு முன்னர் இவர் தனது உறுப்பை பூட்டிய நிலையில், இந்த ஜோடிக்கு இடையே சண்டை வெடித்து இருவரும் பிரிந்து சென்றனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்த பிரிவு ஏற்பட்ட நிலையில், காதலி அந்த சாவியை தராமல் விட்டு சென்றுள்ளார். வேறு வழியின்றி சுமார் 3 மாதம் பூட்டுடன் அந்த நபர் தவித்து திரிந்த நிலையில், ஒரு கட்டத்தில் தனது காதலிடம் மன்றாடி சாவியையும் வாங்கிவிட்டார் அந்த நபர்.

ஆனால், அந்த பூட்டில் துரு பிடித்துவிட்டதால் சாவியை வைத்து திறக்க முடியவில்லை. எனவே தான் தனக்கு தீர்வு கிடைக்க டாட்டு கலைஞர் லா டுர்டா பியர்சர் இடம் சென்றுள்ளார். அந்த பெண் பூட்டை ஆராய்ந்து பார்த்து இது நன்றாக துரு பிடித்தாதல் திறப்பது கடினம் எனக் கூறி சிறிய சுத்தியல் வைத்து பாதுகாப்பாக உடைத்துள்ளார்.

# திருமணத்தை மீறிய உறவு: ஊழியர்களுக்கு எச்சரிக்கை

பொதுவாக நிறுவனங்களில் ஏராளமான கட்டுப்பாடுகளை விதிப்பது உண்டு. வேலைக்கு சரியான நேரத்திற்கு வருவது, குறித்த நேரத்தில் வேலைகளை முடிப்பது, அதிக விடுமுறை நாட்களை தவிர்த்தல். இப்படி பல கட்டுப்பாடுகளை பல அலுவலகங்களில் நாம் பார்த்ததுண்டு. இதில் ஒரு சில அலுவலகங்கள் மிக கடுமையான விதிமுறைகளை கடைப்பிடிப்பதும் உண்டு. அவற்றை மீறினால், வேலையை விட்டு நீக்கும் அளவிற்கு சென்ற நிகழ்வுகளையும் நாம் பார்த்திருப்போம்.

இப்படி இருக்க, சீனாவை சேர்ந்த ஒரு நிறுவனம் மிகவும் வித்தியாசமான விதிமுறையை அமல்படுத்தி உள்ளது. அதன்படி, தனது நிறுவனத்தில் பணி செய்ய கூடிய ஊழியர்கள் திருமணத்தை தவிர வேறொரு தகாத உறவில் இருந்தால், அவர்களை வேலையில் இருந்து பணிநீக்கம் செய்யப்படும் என்று தெரிவித்துள்ளது.

இந்த கட்டுப்பாடு சமூக வலைத்தளத்தில் பேசுபொருளாக மாறி உள்ளது. ஒருவரின் தனிப்பட்ட விஷயத்தில் வேலை பார்க்கும் நிறுவனம் எப்படி தலையிட முடியும் என்பது போன்ற விமர்சனங்களும் முன் வைக்கப்படுகின்றன. ஜேஜியாங் மாகாணத்தை தளமாகக் கொண்ட சீன நிறுவனம் ஒன்று கடந்த ஜூன் 9 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில் இந்த புதிய விதிமுறையை அமல்படுத்த போவதாக கூறியுள்ளது. குறிப்பாக திருமணமான ஊழியர்களை குறிவைக்கிறது இந்த விதிமுறையை கொண்டு வந்துள்ளது.

# டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடர்

Dialog SCHOOLS RUGBY

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், சிலோனிஸ் றக்பி மற்றும் கால்பந்தாட்டக் கழக மைதானத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் இசிப்பத்தன கல்லூரியை சென். ஜோசப் கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

சென். தோமஸ் கல்லூரி மைதானத்தில் நாளை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அவ்வணியை கிங்ஸ்வூட் கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

தவிர, றோயல் வளாகத்தில் நடைபெறவுள்ள போட்டியில் வித்தியார்த கல்லூரியை றோயல் கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

இந்நிலையில், சாஹிரா மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் விஞ்ஞானக் கல்லூரியை சாஹிராக் கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

போகம்பரவில் நடைபெறவுள்ள போட்டியில் சென். பீற்றர்ஸ் கல்லூரியை தர்மராஜ கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

இந்நிலையில், றோயல் வளாகத்தில் நாளை மறுதினம் 4 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டி.எஸ். சேனநாயக்க கல்லூரியை வெஸ்லிக் கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.



மாவட்ட ரீதியிலான பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டம்:

# லிந்துலை சரஸ்வதி பாடசாலை சம்பியன்

■ பி. கேதீஸ்

அங்குராங்கெத்த பொரமடுல்ல தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் மாவட்ட ரீதியில் பாடசாலைகளுக்கிடையே நடைப்பெற்ற டிஎஸ்ஐ (DSI) கரப்பந்தாட்ட போட்டிகளில் லிந்துலை சரஸ்வதி பாடசாலை 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முதலாவது இடத்தையும் 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முதலாவது இடத்தையும் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளது.





மட்டக்களப்பு பாடுமீன் பொழுதுபோக்கு கழக கால்பந்தாட்டத் தொடர்:

# சம்பியனான ஏறாவூர் எஸ்.எஸ்.சி

■ எம்.எஸ்.எம். நூர்தீன்

மட்டக்களப்பு பாடுமீன் பொழுதுபோக்கு கழகத்தின் 75ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் பாடுமீன் பொழுது போக்கு கழகத்தின் ஏற்பாட்டில் பத்மநாபா ஞாபகார்த்த சவால் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் ஏறாவூர் எஸ்.எஸ்.சி அணி சம்பியனானது.

விலகல் முறையில் நடைபெற்ற 32 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியானது வெபர் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது கஞ்சிரங்குடா ஜெகன் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே ஏறாவூர் எஸ்.எஸ்.சி அணி சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 30 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.